**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.3135/ஆ5/2025, நாள்.18/07/2025**

*****

பொருள் பள்ளிக் கல்வி - 2025-2026 மன்றச் செயல்பாடுகள் - அரசு பள்ளியில் பயிலும் 6 முதல் 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பள்ளியளவிலான இலக்கிய மன்றப் போட்டிகள் மற்றும் வினாடி வினா மன்றப் போட்டிகள் - வழிகாட்டு நெறிமுறைகள் - வழங்குதல் - சார்பாக

பார்வை
1. சென்னை - 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.034785/எம்/இ1/2025, நாள். 30.06.2025
2. சென்னை - 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.032841/எம்1/இ1/2025, நாள். 02.07.2025
3. சென்னை - 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.034784/எம்/இ1/2025, நாள். 17.05.2025
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 01.07.2025
5. இவ்வலுவலக கடித ந.க.எண்.3191/ஆ5/2025, நாள்.07.07.2025

*****

பார்வை 1 மற்றும் 2ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி, அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான மன்றச் செயல்பாடுகளை மகிழ் முற்றம் மாணவர் குழுக்கள் வாயிலாக ஒவ்வொரு மாதமும் நடைமுறைப்படுத்துதல் சார்ந்து பெறப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் பள்ளிகளில் செயல்படுத்தும் பொருட்டு பார்வை 4 மற்றும் 5ல் காணும் இவ்வலுவலக கடிதம்படி பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அனுப்பப்பட்டது.

அதனை தொடர்ந்து பார்வை 3ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், 2025-2026ஆம் ஆண்டிற்கான இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா மன்றங்களுக்கான பள்ளி அளவிலான போட்டிகளை பின்வருமாறு நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பிரிவு | வகுப்பு | இலக்கிய மன்ற போட்டிகளின் எண்ணிக்கை | வினாடி வினா மன்ற போட்டிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பிரிவு I | வகுப்பு 6 & 7 | 8 | 1 |
| பிரிவு II | வகுப்பு 8 | 8 | 1 |
| பிரிவு III | வகுப்பு 9 | 8 | 1 |

1. மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு பள்ளி அளவிலான போட்டிகள் நடைபெறுவதை சார்ந்த மன்றப் பொறுப்பாசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்.
2. பள்ளி அளவிலான இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா மன்ற போட்டிகளை 21.07.2025 முதல் 31.07.2025 வரை திட்டமிட்டு நடத்திடல் வேண்டும்.

3. போட்டிக்கான தலைப்புகள், போட்டிக்கான மதிப்பீட்டு படிவம் மற்றும் EMIS தளத்தில் பங்கேற்பாளர்கள் மற்றும் வெற்றியாளர்களின் விவரங்களை உள்ளீடு செய்வதற்கான வழிமுறைகள் ஆகியவை தனித்தனியே இணைப்புகளாக வழங்கப்பட்டுள்ளது.
4. ஒவ்வொரு பிரிவிலும் உள்ள போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களின் பெயர்பட்டியல் பெறப்பட்டு அவை முறையாக EMIS தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும். பின்னர், ஒவ்வொரு பிரிவிற்குமான போட்டிகளை திட்டமிட்டு நடத்தி அன்றைய தினமே வெற்றியாளர்களை அறிவித்திடல் வேண்டும்.
5. பங்கேற்பாளர்கள் மற்றும் வெற்றியாளர்களின் விவரங்கள் 31.07.2025-க்குள் EMIS தளத்தில் தவறாமல் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.
6. பள்ளி அளவிலான போட்டிகளை குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் திட்டமிட்டு நடத்தி முடித்து EMIS தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் மேற்கொள்ள வேண்டும்.
7. 6 முதல் 9ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களையும் இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா மன்ற போட்டிகளில் அவரவர் பிரிவில் பங்கேற்க சார்ந்த மன்றப் பொறுப்பாசிரியர்கள் மாணவர்களை ஊக்குவித்தல் வேண்டும்.
8. பள்ளி அளவில் அவரவர் பிரிவில் நடைபெறும் ஏதேனும் ஒரு போட்டியிலாவது ஒவ்வொரு மாணவரையும் பங்கேற்க செய்தல் வேண்டும்.

பள்ளி அளவில் நடைபெற உள்ள இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா மன்றப் போட்டிகளை மேற்குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் பின்பற்றி திட்டமிட்டு நடத்திட நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (DC) பள்ளி அளவிலான போட்டிகளை குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் திட்டமிட்டு நடத்தி முடித்து அனைத்து அரசு பள்ளிகளும் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளதை உறுதி செய்து அதன் விவரம் இவ்வலுவலகம் தெரிவிக்க தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டக் கல்வி அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர், வட்டாரக் கல்வி அலுவலர்கள், மாவட்ட பள்ளித் துணை ஆய்வாளர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆகியோர் மேற்காணும் வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றி பள்ளி அளவில் இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா மன்றப் போட்டிகள் செயல்படுவதை உறுதி செய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது.

வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார வளமைய மேற்பார்வையாளர் இணைந்து அனைத்து நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு வட்டார அளவிலான கூட்டத்தினை நடத்தி உரிய வழிகாட்டுதல்களை வழங்கி அவர்களை குறிப்பிட்ட காலவரம்பிற்குள் பள்ளி அளவிலான போட்டிகளை திட்டமிட்டு நடத்தி முடித்திட எடுத்துரைத்தல் வேண்டும்.

பள்ளி அளவிலான போட்டிகள் நடைபெறும் போது மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அனைத்து அலுவலர்களும் பள்ளி பார்வை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு –

1. பள்ளி அளவிலான இலக்கிய மன்றப் போட்டிக்கான தலைப்புகள்
2. இலக்கிய மன்றப் போட்டிக்கான நடுவர்களுக்கான மதிப்பீட்டு படிவம்
3. இலக்கிய மன்றப் போட்டிக்கான மூன்று நடுவர்களின் மதிப்பெண்களை தொகுக்கும் தொகுப்பு மதிப்பீட்டு படிவம் (Consolidated Scoring Sheet)
4. பள்ளி அளவிலான வினாடி வினா மன்றப் போட்டி நடத்துவதற்கான வழிமுறைகள்
5. வினாடி வினா மன்றப் போட்டிக்கான நடுவர் மதிப்பீட்டு படிவம்
6. EMIS தளத்தில் பங்கேற்பாளர்கள் மற்றும் வெற்றியாளர்களின் விவரங்களை உள்ளிடு செய்வதற்கான வழிமுறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள்,
   அனைத்து அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

நகல்–

1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,,
   காந்திநகர்,
   வேலூர் மாவட்டம். (இவ்லுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
   வேலூர் மாவட்டம். (மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக)
4. பள்ளித் துணை ஆய்வாளர்கள்,
   (முதன்மைக் கல்வி அலுவலகம் / மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை)
   வேலூர் மாவட்டம் (உரிய அலுவலர் மூலமாக)
5. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
   உதவி திட்ட அலுவலகம், காந்திநகர்
   வேலூர் மாவட்டம். (உதவி திட்ட அலுவலர் மூலமாக)
6. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், வேலூர் மாவட்டம்.
7. ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.